# CATERPILLAR-இன் நன்னடத்தைக் கோட்பாடு

## செயல்பாட்டில் நமது மதிப்புகள்

CATERPILLAR®

# பொருளடக்கம்


**நமது தலைவர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரியின் செய்தி ....... 1**

**சரியான வழியில் வெற்றி பெறுதல் ....... 2**

**நமது திட்டம், நமது நோக்கம் ....... 3**

**புகாரளிக்கும் உரிமைகள் & பொறுப்புகள் ....... 5**

**பழிவாங்குதல் கூடாது....... 5**

**பாதுகாப்பு ....... 6**

அக்கறையை வெளிப்படுத்துதல்.......7

ஒன்றாகக் கற்றல் மற்றும் மேம்படுத்துதல் .......7

கடுமையான காயங்களைத் தடுத்தல் .......8

மனநிலையைப் பகிர்ந்து கொள்வது .......8

**நேர்மை....... 9**

ஆதாய முரண்பாடுகள்.......10

நியாயமாகப் போட்டியிடுதல்.......10

தடையற்ற வர்த்தகம்.......11

நிதி அறிக்கைகள் மற்றும் கணக்கியல் .......11

வெளிப்புறத் தகவல்தொடர்புகள்.......12

இன்சைடர் தகவல்கள்.......13

முறையற்ற பேமெண்ட்கள் .......14

**குழுப்பணி ....... 15**

மரியாதை அளித்தல் மற்றும் துன்புறுத்தலின்மை.......16

நியாயமாகச் செயல்படுதல் மற்றும் பாகுபாடு இல்லாமை .......16

உலகளாவிய மரியாதை .......17

வலுவான ஒத்துழைப்பு.......17

**மேன்மை ....... 18**

தயாரிப்பு மற்றும் சேவைத் தரம்.......19

பணிச்சூழல் .......19

இடர் மேலாண்மை .......20

**அர்ப்பணிப்பு....... 21**

தனிப்பட்ட பொறுப்பு.......22

சொத்துகளின் பாதுகாப்பு.......22

இரகசியத் தகவல்கள் .......23

தொழில்நுட்பம்.......24

தனிப்பட்ட தனியுரிமை.......24

பொது விவகாரங்கள் .......25

அரசாங்க ஒப்பந்தங்கள்.......25

நிலைத்தன்மை .......26

சுற்றுச்சூழல் பொறுப்புணர்வு .......26

மனித உரிமைகள்.......27

**நிறுவனக் கொள்கைகள் & கூடுதல் தகவல்கள் .......28**

# நமது தலைவர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரியின் செய்தி



Caterpillar நிறுவனத்தில், நாம் ஒரு சிறந்த, நிலையான உலகத்தைக் கட்டமைக்கிறோம். பேரிடர் மீட்பு மற்றும் உலகின் உட்கட்டமைப்பை உருவாக்குதல் முதல் முக்கியமான கனிமங்கள் மற்றும் நம்பகமான ஆற்றலை வழங்குவது வரை, நமது கூட்டு நடவடிக்கைகள் மற்றவர்களின் வாழ்க்கையை மேம்படுத்துகின்றன.

நமது உலகளாவிய Caterpillar குழு, நமது வாடிக்கையாளர்களின் கடினமான சவால்களைத் தீர்ப்பது மற்றும் சரியான பாதையில் வெற்றி பெறுவதற்கான நமது அர்ப்பணிப்பு ஆகியவற்றால் ஒன்றுபட்டுள்ளது. பாதுகாப்பு, நேர்மை, குழுப்பணி, மேன்மை மற்றும் அர்ப்பணிப்பு ஆகிய நமது மதிப்புகள் ஒவ்வொரு நாளும் நமது செயல்களை வழிநடத்துகின்றன.

நமது நன்னடத்தைக் கோட்பாடு நமது மதிப்புகளை வரையறுக்கின்றது மற்றும் நமது அன்றாட வேலைகளில் அவற்றைச் செயல்படுத்துவதற்கான வழிகாட்டுதலை வழங்குகின்றது. நமது மதிப்புகளால் வழிநடத்தப்பட்டு, நாம் சுயமாகவும், ஒருவரையொருவரையும் மிக உயர்ந்த தரநிலைகளுக்குப் பொறுப்பேற்கச் செய்கிறோம், நமது முடிவுகள் தொடர்ந்து நெறிமுறைமிக்கவை மற்றும் பொறுப்பானவை என்பதை உறுதிசெய்கிறோம். Caterpillar பணியாளர்களாக நாம் எதைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறோம் என்பதையும், வாடிக்கையாளர்கள், டீலர்கள், சப்ளையர்களுடனும் மற்றும் நாம் ஒருவருக்கொருவருடனும் எவ்வாறு நடந்துகொள்கிறோம் என்பதையும் இந்தக் கோட்பாடு விவரிக்கிறது.

நமது இணையற்ற பணியாளர்களின் நிபுணத்துவமும் அர்ப்பணிப்பும்நம்மை வெற்றியை நோக்கி வழிநடத்த மற்றும் Caterpillar-ஐ பணிபுரிவதற்கு உண்மையிலேயே ஒரு சிறப்பான இடமாக மாற்றுகிறது. நமது கோட்பாட்டைப் படித்துப் புரிந்துகொண்டு அதில் உங்களுக்குக் கேள்விகள் அல்லது கவலைகள் இருக்கும்பட்சத்தில் தைரியமாகப் பேசுவதன் மூலம் நமது பாரம்பரியத்தை உயர்த்திப் பிடிப்பதற்கு நன்றி. ஒவ்வொரு நாளும் நமது மதிப்புகளின்படி வாழ்வது, நாம் அனைவரும் சரியான பாதையில் வெற்றி பெற உதவுகிறது. இன்னும் சிறந்த எதிர்காலத்தை உருவாக்க, நமது வலுவான அடித்தளத்தை நாம் ஒன்றாகக் கட்டமைத்து வருகிறோம்.

ஜோ க்ரீட்
தலைவர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரி

# சரியான வழியில் வெற்றி பெறுதல்

## பாதுகாப்பு. நேர்மை. குழுப்பணி. மேன்மை. அர்ப்பணிப்பு.




இந்த நன்னடத்தைக் கோட்பாட்டில் உள்ள வார்த்தைகள் நம்மை வரையறுக்கின்றன. புவியியல், கலாச்சாரம், மொழி மற்றும் வணிகத்தில் நமக்குள் வேறுபாடுகள் இருந்தபோதிலும், சரியான பாதையில் வெற்றி பெறுவதற்கும் உயர்ந்த நடத்தைத் தரநிலைகளுக்கும் பகிரப்பட்ட அர்ப்பணிப்புடன் இந்தப் பொதுவான கொள்கைகளால் ஒன்றுபட்ட ஒரு நிறுவனமான நாம் ஒரே Caterpillar குடும்பத்தினர்.

நமது வணிகத்திற்குப் பொருந்தும் சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளின் கட்டமைப்பிற்குள் நாம் செயல்படுகையில், உயர்ந்த தரத்தைக் கடைப்பிடிக்கிறோம். நமது பொறுப்பு இணக்கத்திற்கு அப்பாற்பட்டது; நமது மதிப்புகள் –பாதுகாப்பு, நேர்மை, குழுப்பணி, மேன்மைமற்றும் அர்ப்பணிப்பு – நாம் செய்யும் அனைத்தையும் வழிநடத்துகின்றன. கோட்பாட்டைப் பின்பற்றுவதன் மூலம், நாம் அனைவரும் பெருமைப்படக்கூடிய ஒரு பணிச்சூழலையும், மற்றவர்களால் மதிக்கப்படும் மற்றும் போற்றப்படும் ஒரு நிறுவனத்தையும், நமது செயல்களால் சிறந்த உலகத்தையும் உருவாக்குகிறோம். சரியான பாதையில் வெற்றி பெறுவது என்பது உலகின் தலைசிறந்த நிறுவனங்களில் ஒன்றின் நற்பெயரை நாம் நிலைநிறுத்துவதாகும் – அத்துடன் அதன் எதிர்காலத்திற்காக வலுப்படுத்துவதாகும். ஒன்றிணைந்து நாம் நமது மதிப்புகள் சார்ந்த கலாச்சாரத்தை வலுப்படுத்தி, வெற்றியின் இன்னும் உயர்ந்த நிலைகளை நோக்கி நம்மை அழைத்துச் செல்கிறோம்.

இந்த நன்னடத்தைக் கோட்பாடு, Caterpillar Inc., அதன் உலகளாவிய துணை நிறுவனங்கள் மற்றும் இணை நிறுவனங்கள் மற்றும் அதன் பணியாளர்கள், இயக்குநர்கள் குழு உறுப்பினர்களின் அன்றாட நடவடிக்கைகளுக்குப் பொருந்தும். கோட்பாட்டைப் புரிந்துகொள்வதற்கும், அதைத் தொடர்ந்து பயன்படுத்துவதற்கும், நமது மதிப்புகளின்படி வாழ்வதற்கும் நாம் அனைவரும் தனிப்பட்ட பொறுப்பைக் கொண்டுள்ளோம். நாம் மற்றவர்களை வழிநடத்தினால், சரியான பாதையில் வெற்றி பெறுவது என்றால் என்ன என்பதற்கு முன்மாதிரியாக இருப்பதற்கும் நாம்தான் பொறுப்பு.

# நமது திட்டம், நமது நோக்கம்

## நமது திட்டம்

**நமது வாடிக்கையாளர்களின் கடினமான சவால்களைச் சரிசெய்தல்.**

## நமது நோக்கம்

**நாம் ஒரு சிறந்த, நிலையான உலகத்தைக் கட்டமைக்கிறோம்.**




ஒவ்வொரு நாளும், புதுமையான தயாரிப்புகள், சேவைகள் மற்றும் டிஜிட்டல் தீர்வுகள் மூலம் நமது வாடிக்கையாளர்களை நாம் மேம்படுத்துகிறோம்.

நாளைய உள்கட்டமைப்பை உருவாக்குபவர்களையும், அதைச் சாத்தியமாக்கும் பொருட்களை வெட்டி எடுப்பவர்களையும், சமூகங்களை வடிவமைத்து மக்களை இணைக்கும் எரிசக்தி வழங்குபவர்களையும் ஆதரிக்கிறோம்.

நமது தீர்வுகளில் மேம்பட்ட தொழில்நுட்பத்தை ஒருங்கிணைப்பதன் மூலம், நமது வாடிக்கையாளர்களின் உற்பத்தித்திறன், பாதுகாப்பு மற்றும் செயல்திறனை மேம்படுத்த உதவுகிறோம். நமது தீர்வுகள் தொடக்கத்திலிருந்தே டிஜிட்டல் மற்றும் தொழில்நுட்ப ஒருங்கிணைப்புடன் டிசைன் செய்யப்பட்டுள்ளன, இது வாடிக்கையாளர்கள் தங்கள் நிலைத்தன்மை இலக்குகளை அடையவும் அடுத்ததை உருவாக்கவும் உதவுகிறது.

# புகாரளிக்கும் உரிமைகள் & பொறுப்புகள்




சரியான பாதையில் வெற்றி பெறுவது என்பது, நம் செயல்களுக்கு நம்மை நாமே பொறுப்பேற்கச் செய்வதும், ஒருவருக்கொருவர் பொறுப்பேற்கச் செய்வதும் ஆகும். நீங்கள் தைரியமாகப் பேசும்போது, உயர்ந்த நெறிமுறை தரநிலைகளில் பேரம் பேச முடியாத நமது கலாச்சாரத்தை நீங்கள் தீவிரமாக வடிவமைக்கிறீர்கள்.

**கோட்பாடு,** நிறுவனக் **கொள்கை அல்லது நடைமுறை** அல்லது பொருந்தக்கூடிய **சட்டம்,** ஆகியவற்றை மீறுவது குறித்து உங்களுக்குத் தெரிந்தால், நீங்கள் உடனடியாக அதைப் புகாரளிக்க வேண்டும்.

Caterpillar இல் நீங்கள் புகாரளிக்க உங்களுக்கு பல வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன, அவை:

- உங்கள் மேற்பார்வையாளர்
- உள்ளூர் மேலாண்மை
- உள்ளூர் அல்லது கார்ப்பரேட் மனிதவளக் குழுக்கள்
- சட்ட சேவைகளின் குழுக்கள்

கீழே உள்ள தொடர்புத் தகவல்களைப் பயன்படுத்தி வணிக நடைமுறைகள் அலுவலகத்தைத் (OBP) தொடர்பு கொள்ளும் வழியும் உங்களுக்கு எப்போதும் உள்ளது.

**ஆன்லைன் மூலம் புகாரளித்தல்:**
https://caterpillar.ethicspoint.com

**மின்னஞ்சல் மூலம்:** BusinessPractices@cat.com

**அஞ்சல் மூலம்:**
Caterpillar Inc.
Office of Business Practices
100 N.E. Adams Street
Peoria, IL 61629-6485 (USA)

**Call Collect உதவி எண்:**
+770-582-5275 (மொழிபெயர்ப்பு வழங்கப்படுகிறது)

**கட்டணமில்லா உதவி எண்:** Caterpillar, பல நாடுகளில் கட்டணமில்லா உதவி எண்களைக் கொண்டுள்ளது .

- கனடா, அமெரிக்கா மற்றும் அமெரிக்க விர்ஜின் தீவுகளுக்குள், 1-800-300-7898 என்ற எண்ணை அழைக்கவும்.
- மற்ற நாடுகளுக்குத் தற்போது நடைமுறையில் உள்ள சர்வதேசக் கட்டணமில்லா OBP உதவி எண்கள் caterpillar.com தளத்தில் கிடைக்கின்றன. அந்த எண்களுக்கு மொழிபெயர்ப்புச் சேவைகளும் கிடைக்கின்றன.
- பெயர் குறிப்பிடாமல் புகாரளிக்க அனுமதிக்கப்பட்ட நாட்டிலிருந்து நீங்கள் அழைக்கும்போது நீங்கள் பெயர் குறிப்பிடாமல் இருக்கலாம்.

**தொடரும் >**

# புகாரளிக்கும் உரிமைகள் & பொறுப்புகள் (தொடரும்)




நீங்கள் பொறுப்புடனும் மீறல் நடந்துள்ளதாக நியாயமாக நம்பும்போது மட்டுமே நீங்கள் புகாரளிக்க வேண்டும், புகார் துன்புறுத்துவதை நோக்கமாகக் கொண்டதாகவோ அல்லது தனிப்பட்ட கருத்தை மட்டுமே அடிப்படையாகக் கொண்டதாகவோ இருக்கக்கூடாது.

Caterpillar கொள்கைகள், நடைமுறைகள் அல்லது இந்தக் கோட்பாட்டின் மீறல்கள் உடனடியாகவும் திறம்படவும் சரிசெய்யப்படும். மீறல்கள், நிறுவனக் கொள்கை மற்றும் பொருந்தக்கூடிய சட்டத்தின்படி வேலைவாய்ப்பிலிருந்து பிரித்துவிடுதல் உட்பட ஒழுங்கு நடவடிக்கைக்கு வழிவகுக்கும்.

# பழிவாங்குதல் கூடாது

துணிந்துப் பேசுவதற்குத் தைரியம் தேவை, அவ்வாறு செய்வதால் நீங்கள் பாதுகாப்பாகவும் ஆதரவாகவும் உணர உதவ வேண்டும் என்பதில் உறுதிபூண்டுள்ளோம்.

பழிவாங்குதலை Caterpillar ஒருபோதும் பொறுத்துக்கொள்ளாது. நல்லெண்ணத்தில் புகார் எழுப்புபவர் அல்லது சாத்தியமான தவறான நடத்தையைப் புகாரளிப்பவர் எவருக்கும் எதிராக, நியாயமற்ற முறையில் நடத்துதல், பதவி இறக்கம் மற்றும் வாய்ப்புகளிலிருந்து விலக்குதல் உள்ளிட்ட எந்தவொரு பழிவாங்கும் நடவடிக்கையையும் கண்டிப்பாகத் தடைசெய்கிறோம்.

நீங்கள் பழிவாங்கப்படுவதாக நம்பினால், உடனடியாக அதைப் புகாரளிக்கவும். இந்தப் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்குப் பொருத்தமான மற்றும் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்போம்.

# பாதுகாப்பு

## அக்கறை. கற்றல். தடுத்தல்.

### பாதுகாப்புதான் நாம் யார் என்பதன் மையமாகும்

இது மிக முக்கியமானவற்றைப் பாதுகாக்க நம்மைத் தூண்டுகிறது – அதாவது நமது பணியாளர்கள். ஏதேனும் விஷயங்களைப் பாதுகாப்பானதாக்க ஒரு வழியைக் காணும்போது நாம் துணிந்துப் பேசுகிறோம், ஒருவருக்கொருவர் செவிசாய்க்கிறோம் – அதாவது ஒன்றாகக் கற்றுக்கொள்கிறோம், ஒரே குழுவாக மேம்படுகிறோம். கடுமையான தீங்கு விளைவிக்கக்கூடியப் பணிகளில் கவனம் செலுத்துவதன் மூலம் கடுமையான காயங்களைத் தடுக்கிறோம், ஏதேனும்.ஏதேனும் தவறுகள் நடக்கும்போது நமது பணியாளர்களைப் பாதுகாப்பதற்கான கட்டுப்பாடுகளும் பாதுகாப்பு ஏற்பாடுகளும் இருப்பதைக்கொண்டே, நமது வெற்றியை நாம் அளவிடுகிறோம். அக்கறை கொள்ளக் கட்டமைக்கப்பட்டுள்ளோம், கற்றலால் தூண்டப்பட்டு, தடுக்கும் சக்தி பெற்றுள்ளோம்.

# பாதுகாப்பு

**பின்வரும் செயல்களில் நாம் பாதுகாப்பைப் பிரதானப்படுத்துகிறோம்...**




## நாம் அக்கறையை வெளிப்படுத்துகிறோம், தைரியமாகப் பேசுவதில் பாதுகாப்பாக உணர்கிறோம்

அக்கறையை வெளிப்படுத்துவதே நமது அடிப்படை.

- நாம் எப்படி எதிர்வினையாற்றுகிறோம் என்பது முக்கியம் என்பதை உணர்ந்துகொள்கிறோம்.
- தீர்க்கமாக கவனிப்பதன் மூலமும், பிறர்நிலையுணர்வதன் மூலமும், வேலைக்கு மிக நெருக்கமானவர்களிடமிருந்து கற்றுக்கொள்ள ஆர்வமாக இருப்பதன் மூலமும் நாம் ஒருவருக்கொருவர் நம்பிக்கையையும் மரியாதையையும் வளர்த்துக் கொள்கிறோம்.
- பணியாளர்கள்களை பணிவாக இருந்து புரிந்துகொள்ள முயல்வதன் மூலமும் பேசுவதற்கு அதிகாரம் பெற்றவர்களாக உணர்வதன் மூலமும் திறந்த மற்றும் அக்கறையுள்ள கலாச்சாரத்தை ஆதரிக்கிறோம்.

## நாம் தொடர்ந்து முன்னேற ஒன்றாகக் கற்றுக்கொள்கிறோம்

கற்பதும் மேம்படுவதும் மிக முக்கியம்.

- நமது தவறுகளிலிருந்தும் வெற்றிகளிலிருந்தும் அனைவரும் இணைந்து கற்றுக்கொள்ளும் ஒரு கற்றல் கலாச்சாரத்தை நாம் வளர்க்கிறோம்.
- தவறுகள் நடக்கும்போது, பழி சுமத்துவதை விட அதன் பின்னணியைப் புரிந்துகொள்ளவே முயல்கிறோம்.
- நமது பணியாளர்களையே நாம் நிபுணர்களாகக் கருதுகிறோம், வேலைக்கு மிக நெருக்கமாக இருப்பவர்களுக்கே, அப்பணியை எவ்வாறு வெற்றிகரமாகச் செய்து முடிக்க முடியும் என்பது குறித்த மிகச்சிறந்த அறிவு இருக்கும் என்பதை நாம் அங்கீகரிக்கிறோம்.
- நமது கட்டுப்பாடுகள் மற்றும் பாதுகாப்புகளை வலுப்படுத்த அவர்களின் நுண்ணறிவுகளைப் பயன்படுத்துகிறோம்.

# பாதுகாப்பு




## அதிக ஆற்றலின் மீது கவனம் செலுத்துவதன் மூலம் நாம் கடுமையான காயங்களைத் தவிர்க்கிறோம்

கடுமையான காயத்தைத் தடுப்பது மிகவும் முக்கியம்.

- பணியாளர்கள் தவறு செய்கிறார்கள் என்பதையும், சில சமயங்களில் விஷயங்கள் தவறாகிவிடும் என்பதையும் அறிந்துள்ளோம்.
- அதிக ஆற்றல் பணிகளைக் கட்டுப்படுத்தவும், பாதுகாப்புகளின் இருப்பை மேம்படுத்தவும் பணியாற்றுகிறோம் – இதனால் திட்டமிட்டபடி விஷயங்கள் நடக்காவிட்டாலும், நமது பணியாளர்கள் பாதுகாக்கப்படுகிறார்கள்.
- பாதுகாப்பு வெற்றியென்பதை காயங்கள் இல்லாத நிலையாகக் கருதாமல், கட்டுப்பாடுகளும் பாதுகாப்பு ஏற்பாடுகளும் இருப்பதே என்று வரையறுத்துள்ளோம்.

## நமது செயல்கள் நமது வார்த்தைகளுடன் பொருந்துகின்றன

பாதுகாப்பு என்பது நாம் செய்யும் எல்லாவற்றிலும் ஒருங்கிணைக்கும் ஒரு பகிரப்பட்ட மனநிலையாகும்.

- நமது பாதுகாப்புத் திட்டத்தில் – ஊழியர்கள், தலைவர்கள், ஒப்பந்ததாரர்கள் மற்றும் பார்வையாளர்கள் – என அனைவரையும் ஈடுபடுத்துகிறோம்.
- வேலையிலும், சாலையிலும், வீட்டிலும் நாம் ஏற்றுக்கொள்ளும் மனநிலையாகப் பாதுகாப்பு இருப்பதைப் பார்க்கிறோம்.
- நாம் முன்னெச்சரிக்கை பாதுகாப்பு நடவடிக்கைகளை அறிந்துள்ளோம் மற்றும் ஒருவருக்கொருவர் கற்றுக்கொள்ள கதைகளைப் பகிர்ந்து கொள்கிறோம்.

## நாம் எப்படி நடந்துகொள்கிறோம் என்பது முக்கியம்

நாம் யார் என்பதன் மையமாகப் பாதுகாப்பு உள்ளது, அத்துடன் கவலைகளுக்கு நாம் எவ்வாறு வினையாற்றுகிறோம் என்பது நாம் ஒருவருக்கொருவரிடம் எவ்வளவு கற்றுக்கொள்ள முடியும் என்பதை நேரடியாகப் பாதிக்கிறது. பாதுகாப்பு பற்றிப் பேசுவது முக்கியம் மட்டுமல்ல, அது அவசியமானதும் கூட. இதன் மூலம்தான் நம்பிக்கையை வளர்க்கிறோம், கட்டுப்பாடுகளை மேம்படுத்துகிறோம், ஒவ்வொரு நாளும் அனைவரும் பாதுகாப்பாக வீடு திரும்புவதை உறுதி செய்கிறோம். தொடர்ந்து ஆர்வமாக இருப்பதன் மூலமும், திறந்த உரையாடலை ஊக்குவிப்பதன் மூலமும், மற்றவர்கள் பேசுவதற்கான இடத்தை உருவாக்குவதன் மூலமும், கற்றல் கலாச்சாரத்தை வளர்ப்பதில் தலைவர்கள் முக்கியப் பங்கு வகிக்கின்றனர். தனிநபர்கள் தங்கள் கவலைகளைத் தெரிவிக்கப் பாதுகாப்பாக உணரும்போது, நாம் கற்றுக்கொள்வதற்கும், வளர்வதற்கும், தீங்குகளைத் தடுப்பதற்கும் ஆன வாய்ப்புகளைத் திறக்கிறோம்.

# நேர்மை

## சரியானதைச் செய்யுங்கள்

### நாம் செய்யும் அனைத்திற்கும் நேர்மையே அடித்தளம்

இது என்றுமே மாறாது. நாம் யாருடன் வேலை செய்கிறோமோ, வாழ்கிறோமோ மற்றும் சேவை செய்கிறோமோ அவர்கள் நம்மை நம்பியிருக்கலாம். நாம் நமது செயல்களை நமது வார்த்தைகளுடன் இணைத்து, நாம் அளித்த வாக்குறுதியை நிறைவேற்றுகிறோம். நம்பிக்கையின் மூலம் நமது நற்பெயரை நாம் உருவாக்கிப் பலப்படுத்துகிறோம். நாம் மற்றவர்கள் மீது தவறாகச் செல்வாக்கு செலுத்தவோ அல்லது அவர்கள் நம் மீது தவறாகச் செல்வாக்கு செலுத்தவோ விடமாட்டோம். நாம் மரியாதைக்குரியவர்கள், வெளிப்படையாகவும் நேர்மையாகவும் நடந்து கொள்கிறோம். சுருக்கமாகச் சொன்னால், நிறுவனத்தின் நற்பெயர் இங்குப் பணிபுரிபவர்களின்நெறிமுறை சார்ந்த செயல்பாடுகளைப் பிரதிபலிக்கிறது.

# நேர்மை

**பின்வரும் செயல்களில் நாம் நேர்மையைச் செயலில் காட்டுகிறோம்......**



## நாம் ஆதாய முரண்பாடுகளைத் தவிர்க்கவும், நிர்வகிக்கவும் செய்கிறோம்

நிறுவன வணிகத்திலிருந்து தனிப்பட்ட நலன்களைப் பிரிப்பது நம்பிக்கையை வளர்க்கிறது.

- நாம் ஆதாய முரண்பாட்டை உருவாக்கும் அல்லது உருவாக்குவது போல் தோன்றும் செயல்களைத் தவிர்க்கிறோம்.
- நாம் Caterpillar நிறுவனத்தை நியாயமாகப் பிரதிநிதித்துவப்படுத்துவதைத் தனிப்பட்ட, குடும்பம் அல்லது பிற உறவுகள் கடினமாக்கும்போது, ஆதாய முரண்பாடுகள் எழுகின்றன என்பதை அறிந்துள்ளோம்.
- நாம் நிறுவனச் செலவு, பணியமர்த்தல் அல்லது இரகசியத் தகவல்களை அணுகுவது ஆகியவை ஆதாய முரண்பாடுகளுக்கான அதிக ஆபத்தைக் கொண்டுள்ளன என்பதைப் புரிந்துகொள்கிறோம்.
- நாம் நியாயமான மதிப்புள்ள, எல்லாச் சட்டங்கள் மற்றும் நமது கொள்கைகள் மற்றும் நடைமுறைகளுக்கு இணங்கும் பரிசுகள் மற்றும் பொழுதுபோக்குகளை மட்டுமே பரிமாறிக்கொள்கிறோம்.

## நாம் நியாயமாகப் போட்டியிடுகிறோம்

நியாயமான போட்டி என்பது சுதந்திரமான நிறுவனத்திற்கு அடிப்படையானது.

- நாம் வணிகம் செய்யும் இடங்களில் நம்பிக்கை எதிர்ப்பு மற்றும் போட்டிச் சட்டங்களைக் கடைப்பிடிக்கிறோம்.
- நாம் போட்டியாளர்கள், டீலர்கள், விநியோகஸ்தர்கள், சப்ளையர்கள் மற்றும் வாடிக்கையாளர்களுடன் போட்டியைக் கட்டுப்படுத்தும் ஒப்பந்தங்களைத் தவிர்க்கிறோம்.
- விலை, விற்பனை விதிமுறைகள், விற்கப்பட்ட அளவுகள் அல்லது வாடிக்கையாளர்களை ஒதுக்குவது குறித்து போட்டியாளர்களுடன் நாம் விவாதம் அல்லது ஒப்பந்தங்களில் ஈடுபடுவதில்லை.
- ஊதியங்கள், சலுகைகள் அல்லது பணியமர்த்தல் தொடர்பாக நாம் மற்ற நிறுவனங்களுடன் ஒப்பந்தங்களைச் செய்வதில்லை.

# நேர்மை




## நாம் தடையற்ற வர்த்தகத்தை ஆதரிக்கிறோம் மற்றும் சர்வதேச வர்த்தகச் சட்டங்களைப் பின்பற்றுகிறோம்

தடையற்ற வர்த்தகம் போட்டியை வளர்க்கிறது, தொடர்ச்சியான முன்னேற்றத்தை முன்னெடுக்கிறது மற்றும் உலகளவில் நமது வாடிக்கையாளர்களுக்குச் சிறப்பாகச் சேவை செய்ய உதவுகிறது.

- நாம் உலகளாவிய போட்டியை அதிகரிக்கும், வர்த்தகம் மற்றும் முதலீட்டுத் தடைகளைக் குறைக்கும் அல்லது அகற்றும் கொள்கைகளை ஆதரிக்கிறோம் மற்றும் ஊக்குவிக்கிறோம்.
- நாம் இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டு விதிமுறைகள், தடைகள் மற்றும் புறக்கணிப்புத் தடுப்புச் சட்டங்கள் உள்ளிட்ட பொருந்தக்கூடிய சர்வதேச வர்த்தகச் சட்டங்களைப் பின்பற்றுகிறோம்.
- நாம் வணிகம் செய்யும் நாடுகளில் உள்ள வர்த்தகச் சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு இணங்குகிறோம்.

## நாம் துல்லியமான மற்றும் முழுமையான நிதிப் பதிவுகள் மற்றும் அறிக்கைகளை உருவாக்குகிறோம்

முதலீட்டாளர்கள், கடன் வழங்குநர்கள், ஒழுங்குமுறை அதிகாரிகள் மற்றும் பிறருடன் நம்பிக்கையை வளர்ப்பது, Caterpillar-இன் நிதி மற்றும் கணக்கியல் தகவல்களின் நேர்மை மற்றும் துல்லியத்தைப் பொறுத்தது.

- நாம் தரவு மற்றும் உண்மைகளைத் துல்லியமாகப் பிரதிபலிக்கும் கணக்கியல் மற்றும் நிதிப் பதிவுகளை உருவாக்குகிறோம்.
- உண்மையான, சரியான மற்றும் முழுமையான நிதிப் பதிவுகளை உருவாக்குவதற்கும், உள் கட்டுப்பாடுகளைப் பின்பற்றுவதற்கும் நாம் அனைவரும் பொறுப்பைப் பகிர்ந்து கொள்கிறோம்.
- நாம் நமது வெளிப்புற அறிக்கையிடலுக்குப் பயன்படுத்துவதைப் போலவே, நமது உள் நிதி அறிக்கையிடல் மற்றும் மேலாண்மை அறிக்கையிடல் கருவிகளுக்கும் அதே நேர்மை மற்றும் வெளிப்படைத்தன்மைத் தரநிலைகளைப் பயன்படுத்துகிறோம்.

# நேர்மை

## நாம் நமது தகவல்தொடர்புகளில் நேர்மையானவர்கள், தெளிவானவர்கள் மற்றும் மரியாதைக்குரியவர்கள்



நாம் ஒருவருக்கொருவர் மற்றும் நமது பங்குதாரர்களுடன் நம்பிக்கையை வளர்ப்பதற்கு வெளிப்படைத்தன்மை அவசியம்.

- நாம் ஒரு பொது நிறுவனமாக நமது பொறுப்பை தீவிரமாக எடுத்துக்கொள்கிறோம், எல்லாப் பங்குதாரர்களுடனும் மரியாதைக்குரிய, நியாயமான மற்றும் நேர்மையான முறையில் தகவல்தொடர்பு கொள்கிறோம்.
- நாம் அமெரிக்கப் பத்திரங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணையத்திற்கும் பிற அரசு மற்றும் ஒழுங்குமுறை நிறுவனங்களுக்கும் முழுமையான, சரியான நேரத்தில் மற்றும் துல்லியமான வெளிப்படுத்தல்களைச் செய்கிறோம்.
- நாம் நமது பொதுத் தகவல்தொடர்புகளில் நிலைத்தன்மையைப் பேணுகிறோம், எந்தவொரு குழு அல்லது தனிநபருக்கும் சாதகமாக இல்லாமல், வெளிப்படையாகவும் பாரபட்சமின்றியும் செய்திகளை வெளியிடுகிறோம்.
- நாம் நியமிக்கப்பட்ட செய்தித் தொடர்பாளர்கள் மட்டுமே Caterpillar-இன் சார்பாகத் தொடர்பு கொள்ளலாம் அல்லது ஊடகங்கள், அரசாங்கங்கள், ஆய்வாளர்கள் மற்றும் பங்குதாரர்களிடமிருந்து வரும் தகவல் கோரிக்கைகளுக்குப் பதிலளிக்கலாம் என்பதைப் புரிந்துகொள்கிறோம்.

# நேர்மை



## நாம் நிறுவனத்தின் எல்லாத் தகவல்களையும் சரியான முறையில் கையாளுகிறோம்

ஒருவருக்கொருவர், நமது பங்குதாரர்கள் மற்றும் பொதுமக்களிடையே நம்பிக்கையை ஏற்படுத்துவதற்கு இன்சைடர் தகவல்களைப் பாதுகாப்பது முக்கியம்.

- நாம் Caterpillar-ஐப் பற்றிய "முக்கியத்" தகவல்களைதனிப்பட்ட இலாபத்திற்காகப் பயன்படுத்தக்கூடாது, அதை மற்றவர்களுக்கு வழங்கக்கூடாது அல்லது Caterpillar-இன் பங்குகளில் வர்த்தகம் செய்யப் பயன்படுத்தக்கூடாது.
- நாம் மூன்றாம் தரப்பினரின் (டீலர்கள், சப்ளையர்கள், வாடிக்கையாளர்கள் அல்லது போட்டியாளர்கள் உட்பட) இன்சைடர் தகவல்களை வைத்திருந்தால், அவர்களின் பங்குகளில் நாம் வர்த்தகம் செய்யக்கூடாது, மற்றவர்களும் வர்த்தகம் செய்ய நாம் அறிவுறுத்தக்கூடாது.
- Caterpillar-இன் இன்சைடர் வர்த்தகக் கொள்கையைப் பின்பற்றுவதற்கு நாம் அனைவருமே பொறுப்பு. இதில் நமது குடும்பத்தினரும், இன்சைடர் தகவல்களை அணுகக்கூடிய மற்றவர்களும் அடங்குவர்.

**இன்சைடர் தகவல்கள்** என்பது – நிதித் தரவு, தொழில்நுட்பப் ஆவணங்கள் அல்லது எதிர்காலத் திட்டங்கள் போன்ற – மற்றவர்களுக்குக் குறிப்பிடத்தக்க மதிப்பைக் கொண்டிருக்கக்கூடிய ஆனால் பொதுவில் கிடைக்காத நிறுவனத் தகவல்கள் ஆகும். ஒரு முதலீட்டாளர் முதலீட்டு முடிவை எடுக்கும்போது முக்கியமானதாகக் கருதினால், அந்தத் தகவல் முக்கியமானதாகக் கருதப்படலாம், அது கண்டிப்பாக இரகசியமாக வைக்கப்பட வேண்டும்.

# நேர்மை



## முறையற்ற பேமெண்ட்களை மறுக்கிறோம்

நேர்மை மற்றும் ஒருமைப்பாட்டுக்கான நமது நற்பெயர் நமது நெறிமுறை நடத்தையின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்டுள்ளது.

- நாம் எந்தவொரு பொது அதிகாரிகளின் செயல்கள் அல்லது முடிவுகளை அல்லது பிற நிறுவனங்கள் அல்லது தனிப்பட்ட குடிமக்களின் செயல்களையோ அல்லது முடிவுகளையோ, நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ, இலஞ்சம் அல்லது கமிஷன்போன்ற முறையற்ற பேமெண்ட்கள் மூலம் பாதிக்கும் செயலில் ஈடுபடமாட்டோம்.
- நாம் சாத்தியமான இலஞ்சங்கள் மற்றும் கமிஷன்களை எவ்வாறு அறிவது என்பதைப் புரிந்துகொண்டுள்ளோம், முறையற்ற பேமெண்ட்கள் அல்லது பொருத்தமற்ற வணிக மரியாதைகளுக்கான எந்தவொரு கோரிக்கைகளையும் உடனடியாகப் புகாரளிப்போம்.
- நாம் மூன்றாம் தரப்பினர் மற்றும் டீலர்களுடனான நமது உறவுகளைக் கவனமாக நிர்வகிக்கிறோம், நமது நடைமுறைகளுக்குத் தேவையான அளவு விடாமுயற்சியுடன் செயல்படுகிறோம்.
- நாம் எல்லா நிதிப் பரிவர்த்தனைகளையும் துல்லியமாகவும் நேர்மையாகவும் பதிவு செய்கிறோம்.

### நாம் எப்படி நடந்துகொள்கிறோம் என்பது முக்கியம்

நாம் செய்யும் அனைத்திற்கும் நேர்மையே அடித்தளம். தவறான நடத்தை அல்லது கவலைகளைப் பற்றி நீங்கள் பேசும்போது, நிறுவனம் முழுவதும் நம்பிக்கையை வளர்க்க உதவுகிறீர்கள். தவறுகள் ஒன்றாகக் கற்றுக்கொள்ளவும் வளரவும் வாய்ப்புகளை வழங்கும் என்பதை நாம் அறிவோம். தலைவர்கள் செவிசாய்த்து, நடவடிக்கை எடுத்து, முன்மாதிரியாக வழிநடத்துகிறார்கள் – நேர்மை மற்றும் நம்பிக்கை மூலம் சரியான பாதையில் வெற்றி பெறுவது என்றால் என்ன என்பதைக் காட்டுகிறார்கள்.

# குழுப்பணி

## ஒன்றாக வெற்றி பெறுங்கள்

### நாம் ஒருவருக்கொருவர் வெற்றிபெற உதவுகிறோம்

நாம் ஒரு குழுவாக இருக்கிறோம், நம்முடன் பணிபுரிபவர்களுக்கு, வாழ்பவர்களுக்கு, சேவை செய்பவர்களுக்கு உதவ நமது தனித்துவமான திறமைகளைப் பகிர்ந்து கொள்கிறோம். நமது பணியாளர்களின் மாறுபட்ட சிந்தனை மற்றும் முடிவெடுக்கும் திறன் நமது குழுவைப் பலப்படுத்துகிறது. நாம் வெவ்வேறு கருத்துகள், அனுபவங்கள் மற்றும் பின்னணிகளைக் கொண்ட மக்களுக்கு மதிப்பளிக்கிறோம். நாம் தனியாகச் செயல்படுவதை விட, ஒன்றாகச் செயல்படுவதன் மூலம் சிறந்த முடிவுகளை அடைய முடியும் என்பதை அறிவோம்.

# குழுப்பணி

**பின்வரும் செயல்களில் நாம் குழுப்பணியைப் பிரதானப்படுத்துகிறோம்...**



## நாம் மற்றவர்களை மரியாதையுடன் நடத்துகிறோம், வெறுப்பு அல்லது துன்புறுத்தலைப் பொறுத்துக்கொள்ள மாட்டோம்

மரியாதை, நம்பிக்கை மற்றும் கண்ணியத்திற்கான அர்ப்பணிப்பு என்பது ஒவ்வொருவரும் தங்கள் முழுத் திறனையும் அடைய உதவுகிறது.

- நாம் மிரட்டல் மற்றும் துன்புறுத்தல் இல்லாத ஒரு பணிச்சூழலை உருவாக்கி வளர்க்கிறோம்.
- நேர்மறையான பணிச்சூழலை எதிர்பார்க்கும் உரிமை நமக்கு உள்ளது.
- நமது மதிப்புகளுக்கு இசைவாக இல்லாத நடத்தையை நாம் கவனித்தால், அதை எதிர்த்து தைரியமாகப் பேசவும், மாற்றத்தைக் கேட்கவும் நமக்குப் பொறுப்பு உள்ளது.

## நாம் பணியாளர்களை நியாயமாக நடத்துகிறோம், பாகுபாட்டைத் தடை செய்கிறோம்

அனைவரும் நியாயமாகவும் சமமாகவும் நடத்தப்படும்போது, உற்பத்தித் திறன் கொண்ட மற்றும் ஊக்கமளிக்கும் பணியாளர்கள் கிடைக்கிறார்கள்.

- நாம் அனைத்து ஊழியர்கள் மற்றும் பங்குதாரர்களின் பங்களிப்புகளை மதிக்கிறோம் மற்றும் அங்கீகரிக்கிறோம்.
- நாம் ஊழியர்களை அவர்களின் தகுதிகளின் அடிப்படையில் தேர்ந்தெடுத்து வேலை செய்வதற்கான தகுந்த இடத்தில் பணியமர்த்துவதன் மூலம் நாங்கள் நம்பிக்கையை வளர்க்கிறோம்..
- நாம் இனம், மதம், தேசியப் பூர்வீகம், நிறம், பாலினம், பாலின அடையாளம், பாலியல் நாட்டம், வயது மற்றும்/அல்லது உடல் அல்லது மன இயலாமை ஆகியவற்றைப் பொருட்படுத்தாமல் வேலைவாய்ப்பு முடிவுகளை எடுக்கிறோம்.
- நாம் வணிகம் செய்யும் எல்லா இடங்களிலும் பாகுபாட்டைத் தடைசெய்யும் எல்லாச் சட்டங்களையும் பின்பற்றுகிறோம்.

# குழுப்பணி



## நாம் நமது நிறுவனத்திற்குள்ளும், உலகம் முழுவதும் அனைவரையும் உள்ளடக்கிய முறையில் செயல்படுகிறோம்

பல்வேறு பின்னணிகள், திறமைகள் மற்றும் அனுபவங்களைக் கொண்ட மக்கள் ஒன்றிணைந்து செயல்படும்போது, அவர்கள் புதுமையான தீர்வுகளை இயக்கி சிறந்த முடிவுகளை அடைகிறார்கள்.

- நாம் எல்லாத் தனிநபர்களின் தனித்துவமான திறமைகள், திறன்கள், கலாச்சாரங்கள் மற்றும் அனுபவங்களை ஏற்றுக்கொள்கிறோம்.
- நாம் பல்வேறு கண்ணோட்டங்களைத் தேடி, அவற்றை ஏற்றுக்கொள்ளும் தன்மையுடன் இருப்பதன் மூலம் நம்பிக்கையை வளர்த்துக் கொள்கிறோம்.
- நாம் சேவை செய்யும் மக்கள் மற்றும் சமூகங்களில் நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தும் வகையில் பணியாற்றுகிறோம்.

## நாம் வலுவான வணிக உறவுகளை உருவாக்குகிறோம்

வலுவான, பரஸ்பரம் பலனளிக்கும் வணிக உறவுகளைக் கொண்டிருப்பது நமது வெற்றிக்கும் நமது வாடிக்கையாளர்களின் வெற்றிக்கும் மிக முக்கியமானது.

- நாம் அரசு மற்றும் அரசு சாரா நிறுவனங்கள் உட்பட வெளிப்புறப் பங்குதாரர்களுடன் அர்த்தமுள்ள மற்றும் நேர்மையான உரையாடலில் ஈடுபடுகிறோம்.
- நாம் நம்பிக்கை, வெளிப்படையான மற்றும் நேரடியான தகவல்தொடர்பு மற்றும் பகிரப்பட்ட வெற்றி மூலம் டீலர்கள் மற்றும் விநியோகஸ்தர்களுடனான உறவுகளை வலுப்படுத்துகிறோம்.
- நாம் நமது தயாரிப்புகள் மற்றும் சேவைகளின் மதிப்பை மேம்படுத்த, நமது தயாரிப்புகள் மற்றும் தீர்வுகளின் முழு வாழ்க்கைச் சுழற்சி முழுவதும் சப்ளையர்களுடன் நெருக்கமாகப் பணியாற்றுகிறோம், நமது நெறிமுறைக் கொள்கைகளுக்கான அவர்களின் உறுதிப்பாட்டை மேற்பார்வையிடுகிறோம்.

## நாம் எப்படி நடந்துகொள்கிறோம் என்பது முக்கியம்

குழுப்பணி என்பது ஒருவருக்கொருவர் உதவுவதன் மூலம் நாம் ஒன்றாக வெற்றிபெற முடியும் என்பதாகும். சிறந்த அணிகள் பன்முகச் சிந்தனையில் செழித்து வளர்கின்றன. தனித்துவமான கண்ணோட்டங்களையோ அல்லது கவலைகளையோ வெளிப்படுத்துவதுநமது குழுவைப் வலுப்படுத்துகிறது. நாம் திறந்த உரையாடலுக்கு மதிப்பளிக்கிறோம், நாம் தனியாக அடைய முடியாத முடிவுகளை அடைய நடவடிக்கை எடுப்பதில் தலைவர்கள் உறுதியாக உள்ளனர்.

# மேன்மை

## சிறந்தவராக இருங்கள்

### நாம் லட்சிய இலக்குகளை நிர்ணயித்து அடைகிறோம்

நமது தயாரிப்புகள் மற்றும் சேவைகளின் தரமானது Caterpillar-இன் சக்தி மற்றும் பாரம்பரியத்தைப் பிரதிபலிக்கிறது, நாம் செய்வதிலும், நாம் செய்வதைச் சாத்தியமாக்குவதிலும் பெருமை கொள்கிறோம் நாம் பணியாளர்கள், செயல்முறைகள், தயாரிப்புகள் மற்றும் சேவைகளில் சிறந்து விளங்குவதில் மிகுந்த ஆர்வம் கொண்டவர்கள். நாம் புதுமை, தொடர்ச்சியான முன்னேற்றம், வாடிக்கையாளர் தேவைகளில் தீவிர கவனம் செலுத்துதல் மற்றும் அவசர உணர்வுடன் அந்தத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான அர்ப்பணிப்பு ஆகியவற்றின் மூலம் நமது வாடிக்கையாளர்களுக்குச் சேவை செய்வதில் உறுதியாக இருக்கிறோம். நம்மைப் பொறுத்தவரை, மேன்மை என்பது ஒரு மதிப்பு மட்டுமல்ல; அது ஓர் ஒழுக்கம் மற்றும் உலகத்தைச் சிறந்த இடமாக மாற்றுவதற்கான ஒரு வழிமுறையாகும்.

# மேன்மை

## பின்வரும் செயல்களில் நாம் மேன்மைப் பிரதானப்படுத்துகிறோம்...




### நமது வாடிக்கையாளர்களுக்குச் சிறந்த தீர்வுகளை வழங்க உறுதிபூண்டுள்ளோம்

நமது தொடர்ச்சியான வெற்றி என்பது நாம் நமது வாடிக்கையாளர்களின் எதிர்பார்ப்புகளைத் தாண்டி செயல்படுவது, நாம் செய்யும் அனைத்திற்கும் பின்னால் உறுதியாக நிற்பதையும் பொறுத்தது..

- வாடிக்கையாளர்களின் தேவைகளைக் கேட்டு, அவர்கள் வெற்றிபெற உதவும் தீர்வுகளை வழங்குவதன் மூலம், மேன்மையை அடைவதற்கான நமது நற்பெயரை உருவாக்குகிறோம்.
- நாம் வழங்கும் அனைத்துத் தயாரிப்புகள் மற்றும் சேவைகளிலும் தனிப்பட்ட முறையில் பெருமை கொள்கிறோம், மிக உயர்ந்த தரம் மற்றும் மதிப்புக்கு உறுதியளிக்கிறோம்.
- தொடர்ச்சியான மேம்பாட்டு முறைகளைப் பயன்படுத்தி, மதிப்பை வழங்க அவசர உணர்வுடன் செயல்படுகிறோம்.
- வாடிக்கையாளர் திருப்தியை அதிகரிக்கவும் அவர்களின் விசுவாசத்தை மேம்படுத்தவும் தேவையான முடிவுகளை எடுத்துச் செயல்படுகிறோம்.

### மேன்மை செழித்து வளரக்கூடிய ஒரு பணியிடத்தை உருவாக்குகிறோம்

நமது பணிச்சூழல் ஒவ்வொரு பணியாளருக்கும் தனிப்பட்ட சாதனை, தொடர்ச்சியான கற்றல் மற்றும் சுய மதிப்பு உணர்வை ஊக்குவிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

- மேன்மையை அடைவதற்கும் புதுமைகளை ஊக்குவிப்பதற்கும் நாம் தீவிரமாகக் கண்ணோட்டங்களைத் தேடவும் பகிரவும் செய்கிறோம்
- நாம் ஒவ்வொரு பணியாளரும் தங்கள் சொந்த செயல்திறனையும் நிறுவனத்தின் செயல்திறனையும் எவ்வாறு மேம்படுத்துவது என்பது குறித்து நல்லெண்ணக் கருத்துகளை வெளிப்படுத்தும் உரிமைக்கு மதிப்பளிக்கிறோம்.
- நாம் நம்முடைய சிறந்த முயற்சிகளை வழங்குவதற்கும், வெற்றி மற்றும் பின்னடைவுகளிலிருந்து கற்றுக்கொள்வதற்கும், நமது திறன்களை வளர்த்துக் கொள்ளவும், Caterpillar-இன் வெற்றிக்கு முழுமையாகப் பங்களிக்கவும் வாய்ப்புகளைத் தீவிரமாகத் தேடுவதற்கும் நாம் பொறுப்பாவோம்.



# மேன்மை

## நிறுவனத்தின் வெற்றிக்கான இடரை நிர்வகிக்கிறோம்

இடரை நிர்வகிப்பது என்பது அனைவரும் ஓர் நிறுவனத்தின் கண்ணோட்டத்தை எடுக்க வேண்டும், நமது ஒட்டுமொத்த நிறுவனத்தையும் பாதிக்கும் வாய்ப்புகள் மற்றும் சவால்களைக் கண்டறிந்து கையாள உதவ வேண்டும்.

- நமது வணிகத்தைப் பாதிக்கக்கூடிய ஒரு சாத்தியமான சிக்கல் அல்லது இடரைக் காணும்போது நாம் உடனடியாக அதைச் சுட்டிக்காட்டுகிறோம்.
- நாம் முழு நிறுவனத்திற்கும் பயனளிக்கும் முடிவுகளை எடுக்கிறோம், மேம்பட்ட செயல்முறைகள், பாதுகாப்பான நடைமுறைகள் மற்றும் புதுமையான யோசனைகள் மூலம் சிறப்பாகச் செயல்படும் வழிகளைத் தேடுகிறோம்.
- நாம் நமது தயாரிப்புகள், சேவைகள் மற்றும் செயல்பாடுகளைப் பலப்படுத்துகிறோம், வெவ்வேறு குழுக்களிடையே கருத்துகளையும் கற்றுக்கொண்ட பாடங்களையும் பகிர்ந்து கொள்கிறோம்.

## நாம் எப்படி நடந்துகொள்கிறோம் என்பது முக்கியம்

மேன்மை என்பது இலட்சிய இலக்குகளை நிர்ணயித்து அடைவதைக் குறிக்கிறது. ஒரு செயல்முறை, தயாரிப்பு, தரம் அல்லது சேவையை மேம்படுத்த நாம் துணிந்துப் பேசும்போது, புதுமைகளைத் தூண்டி, வளரும் வாய்ப்புகளை உருவாக்குகிறோம். தலைவர்கள் சவால்களைச் செயலாக மாற்றி, தங்கள் குழு முன்னேற உதவுவதன் மூலம் இதற்கு உயிர் கொடுக்கிறார்கள்.

# அர்ப்பணிப்பு

## விளைவுகளுக்குப் பொறுப்பேற்றுக்கொள்ளுங்கள்

### நாம் நமது பொறுப்புகளை ஏற்றுக்கொள்கிறோம்

தனிப்பட்ட முறையிலும் கூட்டாகவும், நாம் அர்த்தமுள்ள உறுதிமொழிகளைச் செய்கிறோம் – முதலில் ஒருவருக்கொருவர், பின்னர் நாம் யாருடன் வேலை செய்கிறோமோ, வாழ்கிறோமோ, சேவை செய்கிறோமோ அவர்களுக்கு. நாம் நமது வாடிக்கையாளர்களின் தேவைகளைப் புரிந்துகொண்டு கவனம் செலுத்துகிறோம். நாம் நமது சமூகங்களின் பொறுப்பான உறுப்பினர்கள், நமது சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்கும் பராமரிப்பதற்கும் அர்ப்பணிப்புடன் இருக்கிறோம், நாம் நமது வணிகத்தை நெறிமுறையாக நிர்வகிக்கிறோம். Caterpillar பாரம்பரியத்தை முன்னோக்கி எடுத்துச் செல்வது நமது கடமையும் பொறுப்பும் என்பதை அறிவோம்.

# அர்ப்பணிப்பு

## பின்வரும் செயல்களில் நாம் அர்ப்பணிப்பைப் பிரதானப்படுத்துகிறோம்...



### நாம் தனிப்பட்ட பொறுப்பை ஏற்றுக்கொள்கிறோம்

நமது நற்பெயர் என்பது நமது வாடிக்கையாளர்கள், கூட்டாளர்கள் மற்றும் ஒருவருக்கொருவர் அளித்த உறுதிமொழிகளைத் தொடர்ந்து காப்பாற்றுவதைப் பொறுத்தது.


- நாம் வாடிக்கையாளர்களின் தேவைகளைப் பற்றிய ஆழமான புரிதலைப் பெறுகிறோம், உறுதியளித்ததைப் பின்பற்றுகிறோம் மற்றும் சிறந்த வாடிக்கையாளர் அனுபவத்தை வழங்குகிறோம்.
- நமது முடிவுகளுக்கு நாமே உரிமையாளர், தனிப்பட்ட மற்றும் பகிரப்பட்ட இலக்குகளை அடைவதற்கு நாம் தனிப்பட்ட முறையில் பொறுப்பேற்க வேண்டும்.
- நாம் நல்ல தீர்ப்பைப் பயன்படுத்துகிறோம், நமது நற்பெயரை இழிவுபடுத்தும் அல்லது சேதப்படுத்தும் எந்தவொரு தொடர்புகளையும் தவிர்க்கிறோம்.
- நாம் நிறுவனத்தின் கொள்கைகள் மற்றும் நடைமுறைகளைப் பின்பற்றுகிறோம் மற்றும் சட்டத்திற்கு இணங்குகிறோம்.

### நாம் நமது சொத்துகள், பிராண்டுகள் மற்றும் புதுமைகளைப் பாதுகாக்கிறோம்

நமது சொத்துகள், நிறுவனத்திற்கு முக்கியம்.

- நாம் நிறுவனத்தின் எல்லாச் சொத்துகளையும் – புலப்படும் மற்றும் புலப்படாத – இழப்பு, திருட்டு, சேதம் அல்லது தவறாகப் பயன்படுத்துவதிலிருந்து பாதுகாக்கிறோம்.
- நாம் மற்றவர்களின் முக்கியமான தகவல்கள் அல்லது வர்த்தக இரகசியங்களை அணுகுவதற்காக தனிநபர்களைப் பணியமர்த்துவதில்லை.
- நாம் மற்றவர்களின் செல்லுபடியான அறிவுசார் சொத்துரிமைகளை மதிக்கிறோம், நமது கூட்டாளர்களுடன் நம்பிக்கையை வளர்க்கும் வகையில் நிறுவனத்தின் சொத்துகளைப் பயன்படுத்த உறுதிபூண்டுள்ளோம்.
- நாம் நமது வேலைவாய்ப்பு காலத்திலும் அதற்குப் பின்னரும், நிறுவனம், வாடிக்கையாளர்கள், டீலர்கள் மற்றும் சப்ளையர்கள் ஆகியோருக்குச் சொந்தமான தரவு உட்பட எல்லா வர்த்தக இரகசியங்களையும், அனைத்து முக்கியத் தகவல்களையும் கண்டிப்பாக இரகசியமாக வைத்திருக்க வேண்டும்.
- நாம் நமது நலன்களைப் பாதுகாக்க பொருத்தமான கட்டுப்பாடுகள் உள்ளனவா என்பதை உறுதிசெய்த பின்னரே நிறுவனத் தகவல்களைப் பகிர்ந்து கொள்ள வேண்டும்.

# அர்ப்பணிப்பு



## இரகசியத் தகவல்களை நாம் பாதுகாப்பாக வைத்திருக்கிறோம்

தகவல்கள் என்பது பாதுகாப்பு தேவைப்படும் ஒரு முக்கியமான சொத்து.

- Caterpillar-க்குச் சொந்தமானதாக இருந்தாலும் சரி, வாடிக்கையாளருக்குச் சொந்தமானதாக இருந்தாலும் சரி அல்லது வணிகக் கூட்டாளருக்குச் சொந்தமானதாக இருந்தாலும் சரி எல்லா இரகசியமான மற்றும் தனியுரிமைத் தகவல்களையும் கவனமாகக் கையாளுகிறோம்.
- நாம் நமது வேலையைச் செய்வதற்கு அவசியமானபோது மட்டுமே இரகசியத் தகவல்களை அணுகிப் பயன்படுத்துகிறோம்.
- நாம் இரகசியத் தகவல்களை மரியாதையுடன் கையாளுகிறோம், அங்கீகரிக்கப்படாத எவருடனும் அதைப் பகிர மாட்டோம்.
- நாம் தேவைப்படும்போதும் சட்டப் பாதுகாப்புகள் இருக்கும்போதும் மட்டுமே நிறுவனத்திற்கு வெளியே இரகசியத் தகவல்களைப் பகிர்ந்து கொள்கிறோம்.

இரகசியத் தகவல்களுக்கான எடுத்துக்காட்டுகளில், வர்த்தக இரகசியங்கள், நிதித் தரவு, புதிய தயாரிப்பு அல்லது சேவை மேம்பாட்டுத் திட்டங்கள் மற்றும் பிற கார்ப்பரேட் மற்றும்/அல்லது தனிப்பட்ட தகவல்கள் போன்ற பொதுமக்களுக்கு வெளியிடப்படாத தகவல்களும் அடங்கும்.

# அர்ப்பணிப்பு



## நாம் தொழில்நுட்பத்தைச் சரியான வழியில் பயன்படுத்துகிறோம்

நாம் ஒவ்வொரு நாளும் நமது வணிகத்தை எவ்வாறு நடத்துகிறோம் என்பதில் மின்னணு தொடர்பு மற்றும் தொழில்நுட்பம் முக்கியப் பங்கு வகிக்கிறது.

- நாம் சட்டப்பூர்வமான வணிக நடவடிக்கைகளுக்கு மின்னணுத் தகவல்தொடர்பு மற்றும் அமைப்புகளைப் பயன்படுத்துகிறோம்.
- நாம் நமது அணுகல் மற்றும் சான்றுகளைப் பாதுகாப்பாக வைத்திருக்கிறோம்.
- நாம் இணையம் மற்றும் நிறுவனச் சிஸ்டம்களை நேர்மறையான, தொழில்முறை வணிகச் சூழலை ஆதரிக்கும் வகையில் பயன்படுத்துகிறோம்.
- நாம் சமூக ஊடகங்களில் தகவல்தொடர்பு கொள்ளும்போது நல்ல தீர்ப்பைப் பயன்படுத்துகிறோம், நமது தனிப்பட்ட கருத்துகள் Caterpillar-இன் கருத்துகள் அல்ல என்பதைத் தெளிவுபடுத்துகிறோம், அங்கு நாம் இரகசியத் தகவல்களைப் பகிர்ந்துகொள்ளக் கூடாது.
- நாம் கோட்பாடு மற்றும் நிறுவனக் கொள்கைக்கு இணங்க, பொறுப்பான மற்றும் தொழில்முறையில், செயற்கை நுண்ணறிவு (AI) கருவிகள் உள்ளிட்ட நமது நிறுவனத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துகிறோம்.

## நாம் பணியாளர்களின் தனியுரிமையை மதிக்கிறோம்

நாம் வணிகத்தை எவ்வாறு நடத்துகிறோம் என்பதற்குப் பணியாளர்களின் தனியுரிமையை அங்கீகரித்து, மதிப்பது அவசியம்.

- நாம் நியாயமான மற்றும் சட்டப்பூர்வமான வணிக நோக்கங்களுக்காகத் தேவைப்படும்போது அல்லது பொருத்தமானபோது மட்டுமே தனிப்பட்ட தகவல்களைச் சேகரித்துச் செயலாக்குகிறோம்.
- நாம் சேகரித்துச் செயலாக்கும் தனிப்பட்ட தகவல்களின் பாதுகாப்பு மற்றும் இரகசியத்தன்மையை உரிய முறையில் பாதுகாப்பதில்கவனமாக இருக்கிறோம்.

# அர்ப்பணிப்பு




## நாம் பொதுக் கொள்கைச் சிக்கல்களில் பொறுப்புடன் ஈடுபடுகிறோம்

ஒரு முன்னணி உலகளாவிய உற்பத்தியாளராகவும், அமெரிக்க நிகர ஏற்றுமதியாளராகவும், Caterpillar பொதுக் கொள்கைச் செயல்பாட்டில் தீவிரமாகப் பங்கேற்கிறது, நமது நோக்கத்திற்கு இணங்கி, நமது உத்தியைச் செயல்படுத்துவதுடன் ஒத்துப்போகும் முக்கியப் பிரச்சினைகளுக்கு வாதிடுகிறது.

- நாம் நமது வணிகம் வளரவும் வாடிக்கையாளர்கள், பங்குதாரர்கள் மற்றும் சமூகங்களுக்கு மதிப்பை உருவாக்கவும் உதவும் பிரச்சினைகளை ஆதரிக்க கொள்கை வகுப்பாளர்களுடன் பணியாற்றுகிறோம்.
- நாம் அரசியல் செயல்பாட்டில் நமது ஊழியர்கள் மரியாதையுடன் பங்கேற்பதை ஆதரிக்கிறோம்.

## நாம் அரசு நிறுவனங்களுடன் பணிபுரியும்போது சட்டத்தைப் பின்பற்றுகிறோம்

அரசாங்கங்கள் மற்றும் அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களுடனான ஒப்பந்தங்களுக்குத் தனித்துவமான விதிகள் பொருந்தும்.

- நாம் நமது ஒப்பந்த உறுதிமொழிகளை மதிக்கும் வகையிலும், இந்த வாடிக்கையாளர்களுடன் பரிவர்த்தனை செய்வதற்குப் பொருந்தக்கூடிய சட்டங்களுக்கு இணங்கும் வகையிலும் செயல்படுகிறோம்.
- நாம் நேர்மை மற்றும் நாணயத்துடன் செயல்படுவதன் மூலம் இந்தத் தனித்துவமான கடமைகளை நிறைவேற்றுவதற்கு நாம் பொறுப்பேற்கிறோம்.

# அர்ப்பணிப்பு




## நாம் நிலைத்தன்மைக்கு உறுதிபூண்டுள்ளோம்

நாம் 100 ஆண்டுகளுக்கும் மேலாக நமது வாடிக்கையாளர்களுக்குப் புதுமையான தயாரிப்புகள் மற்றும் சேவைகளை வழங்கும் நமது பாரம்பரியத்தில் பெருமை கொள்கிறோம்.

- தங்குமிடம், சுத்தமான நீர், போக்குவரத்து மற்றும் நம்பகமான எரிசக்தி உள்ளிட்ட உள்கட்டமைப்புக்கான சமூகத்தின் தேவையை நமது வாடிக்கையாளர்கள் பூர்த்தி செய்வதற்கு நாம் உதவுகிறோம்.
- நாம் நமது வாடிக்கையாளர்கள் தங்கள் செயல்பாடுகளின் நிலைத்தன்மையை மேம்படுத்தும் தயாரிப்புகள், சேவைகள் மற்றும் தீர்வுகளைப் பெற, நாம் புதுமைகளைப் படைக்கிறோம்.
- நாம் புதிய தயாரிப்புகள், தொழில்நுட்பங்கள் மற்றும் சேவைகளில் முதலீடு செய்யும்போது தொழில்நுட்பம் மற்றும் வாடிக்கையாளர் நுண்ணறிவைப் பயன்படுத்துகிறோம்.
- நாம் தயாரிப்பு ஆயுளை நீட்டிக்க, மறுஉற்பத்தியை ஊக்குவிக்கிறோம்.
- நாம் நமது வாடிக்கையாளர்கள் தங்கள் நிலைத்தன்மை தொடர்பான நோக்கங்களை அடைய உதவுகிறோம்.

## நாம் சுற்றுச்சூழல் பொறுப்பு மற்றும் கழிவுத் தடுப்பு ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறோம்

சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கான நமது அர்ப்பணிப்பு நமது செயல்பாடுகளை வழிநடத்துகிறது.

- நாம் நமது செயல்பாடுகளிலிருந்து பசுமை இல்ல வாயு வெளியேற்றத்தை மேலும் குறைக்க உறுதிபூண்டுள்ளோம்.
- நாம் நமது இடங்களில் கழிவுகளைக் குறைக்கும், தரத்தை மேம்படுத்தும் மற்றும் வளங்களைத் திறம்படப் பயன்படுத்துவதை ஊக்குவிக்கும் வணிகச் செயல்முறைகளை ஆதரிக்கிறோம்.
- நாம் சுற்றுச்சூழல் சட்டங்கள் மற்றும் விதிமுறைகளைப் பின்பற்றுகிறோம், நமது சப்ளையர்கள் மற்றும் டீலர்களும் அவ்வாறே செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கிறோம்.

# அர்ப்பணிப்பு



## நாம் மனித உரிமைகள் குறித்து அக்கறை கொள்கிறோம்

நமது நீட்டிக்கப்பட்ட மதிப்புச் சங்கிலி முழுவதும் சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட மனித உரிமைகள் கொள்கைகளுக்கு மதிப்பளிக்க, Caterpillar உறுதிபூண்டுள்ளது.

- நாம் பொருந்தும் உள்ளூர்த் தொழிலாளர் சட்டங்களைப் பின்பற்றுகிறோம், நம்முடன் பணிபுரிபவர்களும் அவ்வாறே செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கிறோம்.
- பணியிடத்தில் கட்டாய உழைப்பு, குழந்தைத் தொழிலாளர் மற்றும் பாகுபாடு ஆகியவற்றின் அனைத்து வடிவங்களையும் நாம் மன்னிப்பதில்லை, அவற்றை அகற்றப் பாடுபடுகிறோம்.
- நாம் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் ஊக்குவிப்பதற்கும் நமது உறுதிப்பாட்டிற்கு முரணான செயல்கள் இருப்பதாக நல்லெண்ண நம்பிக்கை உள்ள எந்தவொரு தரப்பினரும் புகாரளிப்பதை ஊக்குவிக்கிறோம்.

## நாம் எப்படி நடந்துகொள்கிறோம் என்பது முக்கியம்

அர்ப்பணிப்பு என்பது நமது பொறுப்புகளையும் அதன் விளைவுகளையும் சொந்தமாக்கிக் கொள்வதாகும். நாம் நமது வாடிக்கையாளர்கள், சமூகங்கள் அல்லது சுற்றுச்சூழலைப் பாதிக்கும் பிரச்சினைகள் குறித்துப் பேசுவதன் மூலமும், நெறிமுறைகள் மற்றும் இணக்கத்தில் வேரூன்றிய ஒரு கலாச்சாரத்தை ஊக்குவிப்பதன் மூலமும் அதைக் காட்டுகிறோம். தலைவர்கள் தங்கள் மேன்மையை முன்மாதிரியாகக் கொண்டு, Caterpillar பாரம்பரியத்தைப் பொறுப்புணர்வு மற்றும் அக்கறையுடன் முன்னோக்கி கொண்டு செல்ல நம் அனைவரையும் ஊக்குவிக்கிறார்கள்.

# நிறுவனக் கொள்கைகள் & கூடுதல் தகவல்கள்

நிறுவனக் கொள்கைகள், நடைமுறைகள் மற்றும் பிற விரிவான நிறுவனக் கொள்கைகள், அத்துடன் இந்த நன்னடத்தைக் கோட்பாடு குறித்த கூடுதல் தகவல்கள் மற்றும் வழிகாட்டுதல் ஆகியவை சரியான பாதையில் வெற்றி பெறுதல் வலைத்தளத்தில் ஊழியர்களுக்குக் கிடைக்கின்றன. நன்னடத்தைக் கோட்பாடு https://www.caterpillar.com/Code-of-Conduct என்ற தளத்தில் பொதுவில் கிடைக்கிறது.

இந்த நன்னடத்தைக் கோட்பாடு வெளியிடப்பட்ட நேரத்தில் அமலில் இருந்த நிறுவனக் கொள்கைகள்:

- நம்பிக்கை எதிர்ப்பு
- ஆதரவு மற்றும் அரசியல் பங்களிப்புகள்
- ஆதாய முரண்பாடுகள்
- தரவுத் தனியுரிமை
- நிறுவனத்தின் வசதிகள்
- மனித உரிமைகள்
- முறையற்ற பேமெண்ட்கள்
- அறிவுசார் சொத்துரிமைகள்
- சொத்துகளின் பாதுகாப்பு
- பயணம், பரிசுகள் மற்றும் பொழுதுபோக்குகளை வழங்குதல் மற்றும் பெறுதல்
- பொதுத் தகவல்தொடர்புகள்

# பாதுகாப்பு

அக்கறை. கற்றல். தடுத்தல்.

# நேர்மை

சரியானதைச் செய்யுங்கள்

# குழுப்பணி

ஒன்றாக வெற்றி பெறுங்கள்

# மேன்மை

சிறந்தவராக இருங்கள்

# அர்ப்பணிப்பு

விளைவுகளுக்குப்
பொறுப்பேற்றுக்கொள்ளுங்கள்.

© 2026 Caterpillar. எல்லா உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை. CAT, CATERPILLAR, LET'S DO THE WORK, அவற்றின் தொடர்புடைய லோகோக்கள், “Caterpillar Corporate Yellow,” “Power Edge” மற்றும் Cat “Modern Hex” வர்த்தக உடை, அத்துடன் இங்கு பயன்படுத்தப்படும் கார்ப்பரேட் மற்றும் தயாரிப்பு அடையாளம் ஆகியவை Caterpillar Inc. நிறுவனத்தின் வர்த்தக முத்திரைகளாகும்.